RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 231 | ஆகஸ்டு 26, 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு டெட் தேர்வில் இருந்து விலக்கு - சட்டப்பேரவையில் தனித் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை: ஆக.26-

2010ஆம் ஆண்டுக்கு முன்பு பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் இருந்து விலக்கு அளிக்க மத்திய அரசை வலியுறுத்தும் அரசின் தனித் தீர்மானம் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று 7வது நாளாக மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், 2010ஆம் ஆண்டுக்கு பின்னர் பணியில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் (டெட்) இருந்து விலக்கு அளிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தனித் தீர்மானத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் பேரவையில் முன்மொழிந்தார்.

அப்போது பேசிய அவர், “தமிழ்நாடு பள்ளிகளில் 23/08/2010-க்கு முன்பாக அன்றைய விதிமுறைகள் மற்றும் தகுதிகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அவர்களின் நீண்டகால பணி அனுபவம் மற்றும் பணிப் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆசிரியர் தகுதித் தேர்வில் இருந்து முழுமையாக விலக்கு அளிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலவசம் மற்றும் கட்டாயக் கல்வி சட்டம் 2009 பிரிவு 23இல் உரிய சட்ட திருத்தம் கொண்டுவந்து, 2010-க்கு முன்பாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கும் வகையில் தேவையான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொண்டு, தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் வழியாக இது தொடர்பான அதிகாரப்பூர்வ



அறிவுறுத்தல் சுற்றறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் நீண்ட காலமாக பணிபுரியும் ஆசிரியர்களின் பணி பலன்கள் எவ்வித தடையுமின்றி தொடர்ந்து நடைபெற உறுதி செய்ய வேண்டும்” என்று தெரிவித்தார்.

இந்த தீர்மானத்தை பாமக சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தளி ராமச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் செல்லசாமி, அதிமுக சட்டமன்ற உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் தாரகை கத்பட் ஆகியோர் ஆதரித்தனர்.

இதுகுறித்து, திமுக சட்டமன்ற உறுப்பினர் எ.வ வேலு பேசுவையில், “ஆசிரியருக்கு கிடைக்கப்பெறும் பணி பலன்கள் மற்றும் பதவி உயர்வு உரிய முறையில் கிடைக்கும் வகையில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருப்பதுடன், நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசை வலியுறுத்துவார்கள். ஆசிரியர்களுக்கு ஆதரவாக கொண்டு வரப்படும் சட்டங்களுக்கு திமுக என்றும் உறுதுணையாக இருக்கும்” என்று தீர்மானத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

பின்னர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் கொண்டு வந்த தனித் தீர்மானம் பேரவையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபநாயகர் ஜே.சி.டி பிரபாகர் அறிவித்தார்.

பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு டெட் தேர்வு கட்டாயம்

2009-ஆம் ஆண்டு இலவசம் மற்றும் கட்டாய கல்வி சட்டத்தின் படி, பணியில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் டெட் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, ஆசிரியர்கள் டெட் தேர்வை எழுதி தேர்ச்சி பெற 2 வருடங்கள் அவகாசம் அளிக்கப்பட்டது. மேலும், ஓய்வு பெறுவதற்கு 5 வருடங்கள் கால அவகாசம் இருப்பவர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில், நாடு முழுவதும் 2010-ஆம் ஆண்டுக்கு முன்பு பணி நியமனம் செய்யப்பட்ட அரசு பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் டெட் தேர்வு கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை உருவானது.

தமிழ்நாட்டில் மட்டும் ஆயிரக்கணக்கில் ஆசிரியர்கள் வேலையை இழக்கும் நிலை ஏற்பட்டது. இந்த விவகாரத்தில் முந்தைய அரசு, சீராய்வு மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததுடன், பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான சிறப்பு டெட் தேர்வை நடத்த முடிவெடுத்தது. மேலும், தகுதி மதிப்பெண்களையும் வகுப்பு அடிப்படையில் குறைத்தது. அதன்படி, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் டெட் தேர்வும் நடத்தப்பட்டது.

இதற்கிடையே, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், டெட் தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயம் என உறுதிப்படுத்திய உச்ச நீதிமன்றம், அதற்கான கால அவகாசத்தை 2028-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை நீட்டித்து உத்தரவிட்டது.

இந்த சூழலில் தற்போது, தவெக தலைமையிலான அரசு, சட்டப்பேரவையில் டெட் தேர்வில் இருந்து விலக்குக் கோரி தனித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் வழக்கில் முதல்வர் விஜய்க்கு அபராதம் விதிக்கப்படும் - நீதிபதி எச்சரிக்கை

சென்னை: ஆக.26-

தேர்தல் வழக்கில் தொடர்ந்து பதிலளிக்காமல் இருந்தால் முதலமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றதை எதிர்த்து, திமுக வேட்பாளர் ஆர்.டி. சேகர் மற்றும் வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இதே போல் திருச்சி கிழக்கு தொகுதியில், முதலமைச்சர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்தும், திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ் மற்றொரு தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அதே போல், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வில்லிவாக்கம் தொகுதியில் வெற்றி பெற்றதை எதிர்த்து, திமுக வேட்பாளர் கார்த்திக் மோகன் மற்றும் வாக்காளர் சிவராஜ் ஆகியோர் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், முதலமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த மனுக்கள் நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன்பு இன்று (ஆகஸ்ட் 25) விசாரணைக்கு வந்தன. அப்போது, முதலமைச்சர் விஜய் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஜி.மாசிலாமணி, தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி மனு தாக்கல் செய்திருப்பதால், பதிலளிக்க முடியவில்லை என தெரிவித்தார்.

இதனை ஏற்க மறுத்த நீதிபதி லட்சுமிநாராயணன், தேர்தல் வழக்கில் இதுவரை ஏன் பதிலளிக்கவில்லை? பலமுறை அவகாசம் வழங்கியும், பதிலளிக்காமல் இருப்பதை ஏற்க முடியாது. முதலமைச்சராக விஜய்க்கு பல கடமைகள் இருக்கலாம். அதற்காக தேர்தல் வழக்கில் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டும் பதிலளிக்காமல் இருக்க முடியுமா? என கேள்வி எழுப்பினார்.

மேலும் முதலமைச்சருக்கு பல கடமைகள் இருக்கலாம். ஆனால் நீதிமன்றம் தனது கடமையை தான் செய்கிறது. தேர்தல் வழக்கில் பதிலளிக்கவில்லை என்றால், 5 லட்சம் ரூபாய் வரை அபராதமும் விதித்த வழக்குகளும் உதாரணமாக உள்ளன. அதனால் அபராதம் 50 ஆயிரம் அபராதம் விதிக்கிறேன். உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து விளக்கத்தை அங்கே தெரிவித்து விடுங்கள் என எச்சரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, முதலமைச்சர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரிய வழக்கு தற்போது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால், இறுதிவாய்ப்பாக பதிலளிக்க ஒரு வாரம் அவகாசம் அளிக்க வேண்டும் என தெரிவித்தார். இதனை ஏற்க மறுத்த நீதிபதி, ஒரு வாரம் அவகாசம் வேண்டும் என்றால் 50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். அபராதம் வேண்டாம் என்றால் ஆகஸ்ட் 27ஆம் தேதி பதிலளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதனையடுத்து, முதலமைச்சர் விஜய் மற்றும் ஆதவ் அர்ஜுனா தரப்பு வழக்கறிஞர்கள், ஆகஸ்ட் 27 ஆம் தேதியே பதிலளிக்க தயாராக இருப்பதால், அபராதம் விதிக்க வேண்டாம் என கோரிக்கை விடுத்தனர். இதனை ஏற்று 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிப்பதை தவிர்த்த நீதிபதி, முதலமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை அன்றைய தினத்திற்கு ஒத்தி வைத்தார்.

## ஆகாஷ் டெலிஷன் மரணம்: 6 காவலர்கள் மீது கொலை வழக்கு : சிபிசிஐடி குற்றப்பத்திரிகையில் அதிர்ச்சி தகவல்கள்

மானாமதுரை, ஆக.26

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே காவல்துறை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஆகாஷ் டெலிஷன் தாக்கப்பட்டு உயிரிழந்ததாக சிபிசிஐடி குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் காவல் ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் உட்பட 6 காவலர்கள் மீது கொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்

மானாமதுரை அருகே கிருஷ்ணராஜபுரத்தைச் சேர்ந்தவர் ஆகாஷ் டெலிஷன் (26). கடந்த மார்ச் 5-ஆம் தேதி நள்ளிரவு மானாமதுரை சீயோன் நகர் பகுதியில் ஏற்பட்ட தகராறில் இருவர் வெட்டுக் காயமடைந்தனர். இது தொடர்பாக ஆகாஷ் டெலிஷனை போலீசார் விசாரணைக்காக அழைத்துச் சென்றதாக கூறப்படுகிறது.

பின்னர் உடல்நலம் பாதிக்கப்பட்ட அவர் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மார்ச் 8-ஆம் தேதி உயிரிழந்தார். அவரது மரணத்தில் காவல்துறையினர் மீது சந்தேகம் இருப்பதாக குடும்பத்தினர் குற்றம்சாட்டி போராட்டங்களில் ஈடுபட்டனர். இதையடுத்து வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

காட்டுப்பகுதியில் இரும்புக் கம்பியால் தாக்குதல்

சிபிசிஐடி விசாரணைக்குப் பின்னர் கடந்த ஜூன் 18-ஆம் தேதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதில், ஆகாஷ் டெலிஷனை மானாமதுரை அருகே யூகலிப்டஸ் மரங்கள் நிறைந்த



காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்று இரும்புக் கம்பியால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது வலது காலில் முழங்காலுக்குக் கீழேயும், கணுக்காலுக்கு மேலேயும் தாக்கியதில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்தக் காயத்தின் விளைவாக ஏற்பட்ட கொழுப்பு இரத்தக்குழாய் அடைப்பு காரணமாக அவர் உயிரிழந்ததாக மருத்துவக் காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரத்தை மறைத்ததாக குற்றச்சாட்டு

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரும்புக் கம்பியை மறைத்து வைத்ததாகவும், ஆகாஷ் போலீசாரிடம் இருந்து தப்பிச் செல்லும்போது கீழே விழுந்து காயமடைந்ததாக தவறான தகவல் பதிவு செய்யப்பட்டதாகவும் குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் திலீபன், சார்பு ஆய்வாளர் குகன் மற்றும் காவலர்கள் மகேந்திரன், காளீஸ்வரன், தெய்வேந்திரன், பழனியப்பன் ஆகிய 6 பேர் குற்றம் சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

68 நாட்களுக்குப் பிறகு குற்றப்பத்திரிகை நகல்

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு 68 நாட்களுக்குப் பிறகு அதன் நகல் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை 12 பக்கங்கள் மட்டுமே இருப்பதாகவும், விசாரணையின்போது பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் வழங்கப்படவில்லை என்றும் குடும்பத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஆகாஷை வீட்டிலிருந்து அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் காவல் ஆய்வாளர் குமாரவேலையும் வழக்கில் சேர்க்க வேண்டும்; குற்றம் சாட்டப்பட்ட 6 காவலர்களையும் கைது செய்ய வேண்டும்; விசாரணை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் வழங்க வேண்டும் என குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

“என் மகனுக்கு நடந்தது போல் வேறு யாருக்கும் நடக்கக்கூடாது”

ஆகாஷ் டெலிஷனின் தாயார் ஆனந்தி கண்ணீருடன் கூறுகையில், “என் மகனை போலீசார் பிடித்துச் சென்றனர். பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவன் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். ஆரம்பத்தில் பாலத்தில் இருந்து குதித்ததால் கால் உடைந்ததாக கூறினர். ஆனால், சிபிசிஐடி விசாரணையில் இரும்புக் கம்பியால் தாக்கியதில் கால் உடைந்தது தெரியவந்துள்ளது” என்றார்.

மேலும், “என் மகன் என்னிடம், ‘அம்மா, என்னை அடித்தார்கள்; அடிக்காதீர்கள் என்று சொல்லியும் அடித்தார்கள்; என் காலை உடைத்துவிட்டார்கள்’ என்று அழுதுகொண்டே கூறினான். அவனுக்கு 26 வயதுதான். பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்திருந்தான். அவனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டிய வயதில் உயிரிழந்துவிட்டான்” என்று வேதனையுடன் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் 16 பேர் மீது புகார் அளித்த நிலையில் 6 பேர் மட்டுமே வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், மற்றவர்கள் மீதும் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

“என் மகனை தாக்கிய அனைவரையும் கைது செய்து சட்டப்படி தண்டிக்க வேண்டும். என் மகனுக்கு நடந்தது போல் இனிமேல் எந்தப் பிள்ளைக்கும் நடக்கக்கூடாது. என் மகனுக்கு நீதி கிடைக்க வேண்டும்” என ஆனந்தி கோரிக்கை விடுத்தார்.

சிபிசிஐடி குற்றப்பத்திரிகை தற்போது குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டுள்ள நிலையில், குற்றம் சாட்டப்பட்டுள்ள காவலர்கள் மீது அடுத்தகட்ட சட்ட நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது..

## தவெக-வின் குதிரை பேரம் : ஆளுநரிடம் மீண்டும் புகார் அளித்த டிடிவி தினகரன்

சென்னை: ஆக.26-

சென்னையில் உள்ள ஆளுநர் மாளிகையில் அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், தமிழக ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை இன்று நேரில் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின் போது தமிழக அரசியலில் நிலவும் குதிரை பேர புகார்கள் மற்றும் அரசியல் சர்ச்சைகள் குறித்து ஆளுநரிடம் மீண்டும் அதிகாரப்பூர்வமாக புகார் அளித்தார். அமமுக சார்பில் போட்டியிட்டு வென்ற MLA காமராஜ், தவெக அரசுக்கு ஆதரவளித்துள்ள நிலையில், குதிரை பேர விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆளுநரை டிடிவி தினகரன் சந்தித்துள்ளார்.

பின்னர் ஆளுநர் மாளிகைக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த டிடிவி தினகரன், குதிரை பேரம் பற்றி புகார் அளித்து 100 நாட்களாகியும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குறிப்பிட்டார். இந்த சூழலில் தவெக-வின் குதிரை பேரம் தொடர்வதாக ஆளுநரிடம் புகார் அளித்துள்ளதாக தெரிவித்தார். பணம், பதவிக்காக எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சி மாறுகின்றனர் என்றும் டிடிவி தினகரன் சாடினார். தங்களின் குதிரை பேர புகார் மீது நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்துள்ளதாக டிடிவி தினகரன் குறிப்பிட்டார்.

## பக்கத்து வீட்டு பெண்ணை குத்திக் கொன்ற வாலிபர் - ரத்தம் வழிந்த கத்தியுடன் சுற்றியதால் பரபரப்பு

கன்னியாகுமரி, ஆக.26-

தாயை கொன்று ஜாமீனில் வந்த வாலிபர், பக்கத்து வீட்டு பெண்ணை குத்திக் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை அருகே கைதக்குழி நாரகம்விளை பகுதியை சேர்ந்தவர் ஸ்டீபன். அவரது மகன் சிஜூ (24 வயது). இவர் கடந்த 2021-ம் ஆண்டு தனது தாயை கொன்றார். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து சிஜூவை கைது செய்து சிறையில் அடைத்தனர். இதனை தொடர்ந்து அவர் ஜாமீனில் வெளியே வந்த நிலையில் தந்தையுடன் வசித்து வந்தார். சிஜூ சற்று மனநலம் பாதிக்கப்பட்ட வர் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ரத்தம் வடிந்த நிலையில் கத்தியுடன் அங்குமிங்கும் தெருவில் சுற்றினார். இதுகுறித்து தகவல் அறிந்த களியக்காவிளை போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து சிஜூவை மடக்கி பிடித்தனர். அவரிடம் இருந்த கத்தியும் பறிமுதல் செய்யப்பட்டது. பிறகு அவரை ஆசுவாசப்படுத்திய போலீசார். நடந்த விவரத்தை கேட்டனர். ஆனால் சிஜூவால் சொல்ல முடியவில்லை. சிஜூவின் மனநிலையை உணர்ந்த போலீசார், அவரை பக்குவமாக அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

பிறகு சிஜூவின் பக்கத்து வீட்டுக்கு சென்ற நிலையில்தான் அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு ஒரு பெண் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார். கத்திக்குத்து காயங்களும் இருந்தன. மேலும் பெரிய கல்லும் கிடந்தது. இதனை வைத்து சிஜூ மற்றும் அக்கம் பக்கத்தினரிடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

அதில் கொல்லப்பட்ட பெண், அசோக்குமாரின் மனைவி லீலா (56 வயது) என்றும், சிஜூவிற்கு உறவினர் என்பதும் தெரிய வந்தது. லீலாவின் வீட்டிற்கு சென்று சிஜூ சாப்பிடுவது வழக்கமாம். மனநிலை பாதிக்கப்பட்டவர் என கருதி லீலாவும், சிஜூவை மென்மையான அணுகுமுறையுடன் கவனித்து வந்துள்ளார். இந்த நிலையில்தான் திடீரென சிஜூ, லீலாவை கத்தியால் குத்தியும், கல்லை தூக்கிப்போட்டும் கொன்றது தெரிய வந்துள்ளது. இதுதொடர்பாக விசாரணை நடந்து வருகிறது.



■ மதுரை வடக்கு வட்டம், சத்திரத்தொண்டைமான்பட்டி கிராமத்தில்மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறுதுறை சார்பில் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்ட அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா பார்வையிட்டார். உதவி ஆட்சியர்(பயிற்சி) சித்தார்த் போகர்னா , மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் , மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஆக.26-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 182 மனுக்களை பெற்றுக் கொண்டார்.



ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 05 பயனாளிகளுக்கு ரூ.1.30 இலட்சம் மதிப்பில் விபத்து நிவாரண உதவித்தொகைகளையும், சமூகப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக 07 பயனாளிகளுக்கு ரூ.2.80 இலட்சம் மதிப்பில் உதவித்தொகைகளையும் ஆக மொத்தம் 12 பயனாளிகளுக்கு ரூ.4.10 இலட்சம் மதிப்பில் உதவித்தொகைகளை வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2026-2027-க்கான விளையாட்டு வீரர்கள் பதிவு செய்வது குறித்த விளம்பர சுவரொட்டியினை வெளியிட்டார்.

இக்கூட்டத்தில், உதவி வன பாதுகாவலர் சுசேத் பல்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.சரவணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராஜா, உதவி ஆணையர் (கலால்) மாதேஷ்வரன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் இந்திரா உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய்.26 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொதுமக்கள் காத்திருப்போர் கூடத்தினை மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் , மாவட்ட ஆட்சித்தலைவர் .நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் திறந்து வைத்தார். மாநகராட்சி மேயர்(பொ)-துணை மேயர்நாகராஜன் , அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு.அருள் சுந்தரேஷ்குமார் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ சென்னையில் மேலும் இரு புதிய கிளைகள் தங்கமயில் ஜுவல்லரி நிறுவனம் திறக்கப்பட்டுள்ளது. தங்கமயில் நிறுவனம் கடந்த 35 ஆண்டுகளாக தங்க நகை விற்பனையில் தனக்கென தனிப்பெருமை அடையாளத்தை பதித்துள்ளது. தங்கமயில் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை தமிழகம் முழுவதும் கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. மேலும் புரசைவாக்கம் மற்றும் முகப்பேர் வெஸ்ட் பிரம்மாண்ட திறப்பு விழா நடைபெற்றது. நவீன கலெக்ஷன்களை தனித்துவமான டிசைன்களாக அறிமுகப்படுத்தி உள்ளது. வருகை தந்த வாடிக்கையாளர் அனைவரையும் கடை நிறுவனத்தினர் பலராம கோவிந்ததாஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர், பா ரமேஷ் இணை நிர்வாக இயக்குனர், என் பி குமார் இணை நிர்வாக இயக்குனர் அன்புடன் வரவேற்றனர்.



# தேவி அழகாத்தம்மன்- பரிவார தெய்வகளுக்கு மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம், ஆக.26

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் ஆங்காடு ஊராட்சி செம்புலிவரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு கிராம தேவதை ஸ்ரீதேவி அழகாத்தம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகி, கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் சக்தி கரகம் எடுத்தல், பொங்கல் வைத்தல், வாஸ்துசாந்தி, கணபதி ஹோமம், கலசஸ்தாபனம், நவக்கிரகம் ஹோமம், கோபூஜை, தனபூஜை, நாடிசந்தானம், பூர்ணாஹுதி, முதல் மூன்று காலயாகசாலை பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம், மூலவர் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இதனைத்தொடர்ந்து அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# சென்னை ஆலப்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

சென்னை, ஆக.26-

சென்னை ஆலப்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீ கெங்கை அம்மன் என்பவள் பாவங்களை போக்கும் புனித நதியான கங்கை நதியின் அம்சமானவள் கங்கை நதி பூமிக்கு வந்த விதம் குறித்து புராணங்களில் சொல்லப்படுவது பகீரத மன்னன் தனது முன்னோர்களின் சாபத்தை நீக்கி அவர்களின் ஆன்மா முக்தி அடைய வேண்டி ஆகாய கெங்கையை பூமிக்கு கொண்டுவர சிவபெருமானை நோக்கி கடுந்தவம் புரிந்ததால் சிவபெருமான் கெங்கையை தனது சடையில் தாங்கி பூமியில் பாயச் செய்தார்.பூமியை வந்தடைந்த கங்காதேவி மக்களின் பாவங்களை எல்லாம் தண்ணீரில் கரைத்து புனிதம் அடைய செய்தாள். அது முதற்கொண்டு மக்களின் சாபங்களை நீக்கும் ஸ்ரீ கெங்கை அம்மனாக மக்கள் வழிபட தொடங்கினர். அது சமயம் தமது ஆலப்பாக்கம் பகுதியில் குடிகொண்டு அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ கெங்கை அம்மனுக்கு நிகழும் மங்களகரமான பராபவ வருடம் ஆவணி மாதம் 6ஆம் நாள் ஏகாதசி திதி மூலம் நட்சத்திரம், அமிர்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் துலா லக்னத்தில் அருள்மிகு ஸ்ரீ





விநாயகர் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் ஸ்ரீ கங்கை அம்மன் ஸ்ரீ பொன்னியம்மன், ஸ்ரீ நவகிரகம் மற்றும் நூதன ராஜகோபுரம் நூதன நுழைவு வாயில் ஆகியவற்றுக்கு மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நன்கொடையாளர்கள் சுமதி டில்லி பாபு , கீர்த்தனா டில்லி பாபு , தொழில் அதிபர் லயன்.ஜி.கிருஷ்ணகுமார் , கே.லாவண்யா கிருஷ்ண குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். அறங்காவலர் குழு மற்றும் ஆலய நிர்வாகிகளால் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.



# ஸ்ரீ அதிசய விநாயகர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம், ஆக.26-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் ஜி.என்.டி.சாலை காரனோடை பஜாரில் அமைந்துள்ள ஸ்ரீ அதிசய விநாயகர் திருக்கோயில் புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா போஷகர் லங்காலிங்கம், தலைவர் சத்யாசெட்டியார், அரிமா சங்கர், பொருளாளர் அரிமா ஜெயசந்திரன், உபதலைவர்கள் திருஞானம், பாலமுருகன், இணை செயலாளர்கள் பாபு,கிருஷ்ணன், சுரேஷ், துணை செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், இணை பொருளாளர் சம்பாலால், கௌரவ ஆலோசகர்கள் சோகன்லால், ராமசந்திரநாயுடு, மாரிமேஸ்திரி, விஜியன் மற்றும் செயல்கமிட்டி உறுப்பினர்கள் உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கிராமதேவதை வழிபாடு, விக்னேஷ்வரபூஜை, புண்யாஹவாசனம், தனபூஜை, கணபதி ஹோமம், லஷ்மி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், கோபூஜை, கரிவலம், வாஸ்துசாந்தி, பிரவேசபலி, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பாலங்காரம், பூர்ணாஹுதி, முதல் நான்கு கால யாகசாலை பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று திருக்கோயில் விமானம், மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பின்னர் பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர். இதனைத்தொடர்ந்து மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

# கடமான் வேட்டையாடிய 6 பேர் கைது

நீலகிரி, ஆக.26-

நீலகிரி வனக் கோட்டம், கட்டபெட்டு வனச்சரகம், பிக்கப்பதி பிரிவிற்குட்பட்ட கனாக்கம்பை வனப்பகுதியில் நாட்டுத் துப்பாக்கியைப் பயன்படுத்தி கடமானை வேட்டையாடிய 6 நபர்களைவனத்துறையினர் அதிரடியாகக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களின் விவரம் வேலு (36), த/பெ. பாலதுரை, திம்மாம்பாளையம் புதூர், காரமடை. சூரியா (32), த/பெ. ராஜா, திம்மாம்பாளையம் புதூர், காரமடை. மாணிக்கம் (36), த/பெ. மாதவன், திம்மாம்பாளையம் புதூர், காரமடை. செந்தில்குமார் (45), த/பெ. ரங்கன், கனாக்கம்பை, உதகை. விஸ்வநாதன் (38), த/பெ. வீரன், கனாக்கம்பை, உதகை. சின்னதுரை (43), த/பெ. ராஜூ, கனாக்கம்பை, உதகை. கட்டபெட்டு வனச்சரக அலுவலர் ஜெயக்குமார் தலைமையிலான வனத்துறையினர் இவர்களைக் கைது செய்து, தீவிர விசாரணை மேற்கொண்டனர். மேலும், இவர்களிடமிருந்து 1 நாட்டுத் துப்பாக்கி, மான் தோல் மற்றும் கத்தி ஆகியவற்றை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர். இவர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு, அனைவரும் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட உள்ளனர். வனத்துறையின் சட்ட எச்சரிக்கை: கடமான் (Sambar Deer) என்பது 'வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1972, பட்டியல் I'-ன் (Schedule I) கீழ் வகைப்படுத்தப்பட்ட,





மிக உயரிய பாதுகாப்பு அந்தஸ்து கொண்ட விலங்காகும். இவற்றை வேட்டையாடுவது பிணையில் வெளிவர முடியாத (Non-bailable), கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகும். பொதுமக்களுக்கான வேண்டுகோள்: வன விலங்குகளை வேட்டையாடுவதோ அல்லது அவற்றின் இறைச்சியை வாங்குவதோ சட்டப்படி பெருங்குற்றமாகும். எனவே, பொதுமக்கள் யாரும் இத்தகைய சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடக் கூடாது என வனத்துறை சார்பில் கடுமையாக எச்சரிக்கப்படுகிறது. வனப்பகுதிகளில் யாராவது வன விலங்குகளை வேட்டையாட முயன்றாலோ அல்லது காட்டு விலங்குகளின் இறைச்சியை விற்க முற்பட்டாலோ, பொதுமக்கள் உடனடியாக வனத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஊத்துக்கோட்டை அருகே போந்தவாக்கம் ஊராட்சியில் அரசுக்கு சொந்தமான நீர்வரத்து கால்வாய் ஆக்கிரமிப்பு

திருவள்ளூர்,ஆக.26-

ஊத்துக்கோட்டை அருகே போந்தவாக்கம் ஊராட்சியில் பலகோடி மதிப்புள்ள பல ஏக்கர் விவசாய நிலங்களுக்கு பயன்படக்கூடிய வரத்து நீர் கால்வாயை ஒரு சில விவசாயிகள் பல வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்து உள்ளதாக கூறப்படுகிறது இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஊராட்சி நிர்வாகத்திற்கும் பலமுறை அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் மனு அளித்தும் கிராம சபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியும் இது வரையும் வருவாய்த்துறை மற்றும் ஊராட்சி நிர்வாகம் கண்டு கொள்ளாத அவல



நிலை இருந்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் குற்ற சாற்றாக இருந்து வருகிறது

எனவே மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் வேளாண்மை துறை அதிகாரிகள் இது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா????????? என சமூக ஆர்வலர்கள் எதிர்பார்பாக இருந்து வருகிறது பொறுத்திருந்து பார்ப்போம்.



# கந்திகுப்பம் தூய விண்ணரசி அன்னை ஆலய திருத்தேர் பவனி வானவேடிக்கையுடன் நடந்தது

கிருஷ்ணகிரி, ஆக.26-

கிருஷ்ணகிரி மாவட்டம் கந்திகுப்பம் தூய விண்ணரசி அன்னை ஆலய திருத்தேர் பவனி வானவேடிக்கையுடன் நடந்தது.

கிருஷ்ணகிரி அருகே கந்திகுப்பம் கிராமத்தில் அமைந்துள்ள தூய விண்ணரசி அன்னை ஆலயத்தின் 48ம் ஆண்டு தேர் திருவிழா கடந்த 16ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. இதனைத் தொடர்ந்து நாள் தோறும் தர்மபுரி, வேலூர், சேலம் உள்ளிட்ட பல்வேறு மறைமாவட்ட குருக்கள் தலைமையில், நவநாள் திருப்பலி உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்று வந்தன. இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளின் ஒன்றான அன்னையின் தேர் பவனி, நேற்று முன்தினம் இரவு மாபெரும் வானவேடிக்கையுடன் நடைபெற்றது.

முன்னதாக காலை, டான்போஸ்கோ சென்னை சலேசிய மாநில தலைவர் மற்றும் ஆரோக்கிய சவரியப்பன், மறைமாவட்ட முதன்மை குரு தலைமையில், சிறப்பு திருவிழா திருபலி நடைபெற்றது. மாலை, அன்னையின் அலங்கரிக்கப்பட்ட திருத்தேரினை தேவசகாயம் மந்திரித்து, பவனியை துவக்கி வைத்தார். இந்த விழாவில், அனைத்து மதத்தினரும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். ஆலய வளாகத்தில் இருந்து துவங்கிய இந்த தேர் பவனி கந்திகுப்பம் மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்கள் வழியாக சென்று, மீண்டும் நள்ளிரவில் ஆலயம் வந்தடைந்தது.

இந்த தேர் பவனியில் பர்கூர், கிருஷ்ணகிரி மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் இருந்து ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்துக்கொண்டு வழிபட்டனர். மேலும், அன்னையின் தேர் பவனியை முன்னிட்டு, ஆலயம் முழுவதும் வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.



■ மதுரை மாவட்டம் ஞானஒளிபுரம் புனித பிரிட்டோ மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித் துறை சார்பில், நடைபெற்ற கலைத்திருவிழாவில், கலந்து கொண்டு, மாணவர்களின் கலைத்திறமைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப.,பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.20262027ஆம் ஆண்டிற்கான கலைத்திருவிழா “இளையோர் திறன்” என்ற மையக்கருத்தில் நடைபெறுகிறது. 910 மற்றும் 1112ஆம் வகுப்பு மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான போட்டிகள் மதுரை மாவட்டத்தில் 3 மையங்களில் நடைபெற்றன.புனித பிரிட்டோ மேல்நிலைப்பள்ளியில் 1112ஆம் வகுப்பு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. இதில் மாணவர்கள் பாடல், நடனம், ஓவியம், நாடகம், இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

# வளர்ப்பு பராமரிப்புத் திட்டம் (Foster Care)

செங்கல்பட்டு, ஆக.26-

செங்கல்பட்டு மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் குழந்தைகள் இல்லங்களில் பல்வேறு சூழல்களில் பாதிக்கப்பட்டு இரு பெற்றோர்களையும் இழந்து தங்கி கல்வி பயின்று வரும் 6 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வளர்ப்பு பராமரிப்புத் திட்டத்தில் (Foster Care) வளர்ப்பு பராமரிப்பு பெற்றோரிடம் இணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, இத்திட்டம் குறித்த விவரங்கள் முழுமையாக அறிந்து குழந்தைகளை வளர்ப்பு பராமரிப்புத் திட்டத்தின் (Foster Care) மூலம் பெற்று வளர்க்க விருப்பம் உள்ளவர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், F- Block, No.06, தரைத்தளம், செங்கல்பட்டு 603 111 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 6382613182 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

# காரனோடை ஸ்ரீ திரௌபதி அம்மன் சமேத ஸ்ரீ தர்மராஜா ஆலயத்தில் 108 சங்காபிஷேகம் விழா





ஸ்ரீ திரௌபதி அம்மன் சமேத ஸ்ரீ தர்மராஜா ஆலயத்தில் ஆண்டு விழாவை முன்னிட்டு 108 சங்காபிஷேகம் பெருவிழா ஆலய அறங்காவலர் குழு தலைவர் கிருஷ்ணன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சந்திரசேகர், புவனேஸ்வரி, ஆலய நிர்வாகிகள் ராமசந்திரன், ஜெயசந்திரன், கோபால், முனுசாமி, ராஜேந்திரன், ராமசந்திரன், தயாளன், குழந்தைவேலு, ரவிக்ண்ணண், ராமதாஸ், செல்லப்பன் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் மூலவர் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்து பின்னர் உற்சவருக்கு 108 சங்காபிஷேகம் செய்யப்பட்டு வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்து மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் மகளிரணிகள் ராணி, வசந்தினி, உமாமகேஷ்வரி, காஞ்சனா, புஜ்ஜி அம்மாள், சசிகலா, மரகதம், சங்கீதா, மலர், சரண்யா, சுபாஷினி, கீதா, வரலட்சுமி உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு சமத்துவ விருந்து வழங்கப்பட்டது.



# புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்சசி

கிருஷ்ண்கிரி, ஆக.26-

கிருஷ்ணகிரி மாவட்டம் புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி சார்பில், 10 ஒன்றியத்தை சார்ந்த மாற்றுத்திறன் மாணவர்களுக்கு, அலிம்கோ உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி, புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடந்தது. அலிம்கோ செயற்கை உறுப்பு நிபுணர் மற்றும் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் ஜெனிப்பர், மறுவாழ்வு அலுவலர் அமன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கணேசன், ராஜா, வட்டார வள மைய மேற்பார்வையாளர் அசோக், தலைமை ஆசிரியர் கிரிஜா, ஆசிரியர் பயிற்றுனர் தமிழரசு ஆகியோர் கலந்து கொண்டு, மாணவ, மாணவிகளுக்கு உதவி உபகரணங்களை வழங்கினர். இதில், சி.பி., வீல் சேர் 23, காதொலி கருவி 68, சக்கர நாற்காலி 56, ரோலேட்டர் 21, காலிப்பர் 10, கல்வி உபகரண பை 147 என மொத்தம், 274 பேருக்கு, 26 லட்சத்து, 75 ஆயிரத்து 274 ரூபாய் மதிப்பிலான உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும், உபகரணங்களை பயன்படுத்தும் விதம் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. முகாமிற்கான ஏற்பாடுகளை சிறப்பு பயிற்றுனர்கள் அருண்குமார், ரமேஷ், ஜித்தன் இயன்முறை மருத்துவர்கள் ஜெயசித்ரா, அன்பு, அசோக், நெல்சன், கஜலட்சுமி, நதிய சாந்தி, எழிலரசி, சவிதா, கோகிலா, சிறப்பு மைய பணியாளர்கள் கல்பனா, சந்திரா ஆகியோர் செய்திருந்தனர்.

# தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதன் முறையாக 10&15 வினாடிகளில் பொதுமக்களின் மனுக்களை பதிவேற்றம் செய்யும் ஏஐ தொழில்நுட்ப பயன்பாடு துவக்கம்



கிருஷ்ணகிரி, ஆக.26-

தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதன் முறையாக 10&15 வினாடிகளில் பொதுமக்களின் மனுக்களை பதிவேற்றம் செய்யும் ஏஐ தொழில்நுட்பப்ப பயன்பாடு துவங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக கிருஷ்ணகிரியில் 10&15 வினாடிகளில் பொதுமக்களின் மனுக்களை பதிவேற்றம் செய்யும் ஏஐ தொழில்நுட்ப பயன்பாடு தொடங்கப்பட்டுள்ளது என கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், மாவட்டத்தில், ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று, மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து, 500 முதல் 800 வரை கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றது. பொது மக்களின் சிரமங்களைப் குறைக்கவும், அவர்கள் அளிக்கும் மனுவினை உடனுக்குடன் பதிவேற்றம் செய்வதற்காகவும், ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2025ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு முன்பு, மனு எழுதுவதற்கு பொதுமக்கள் தனி நபர்களிடம் ரூ.50 வழங்கி வந்தனர். பொதுமக்கள் சிரமமின்றி மனுக்கள் வழங்க மாவட்ட நிர்வாகம் மூலம் 6 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, இலவசமாக மனு எழுதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மனு எதுவும் எடுத்து வராதபட்சத்தில், அவர்களுடைய கோரிக்கையை குரல் வழி உள்ளீடு மூலமாக ஒரு மனுவாக மாற்றித் தரும் ஏஐ தொழில்நுட்பத்தை இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை நிலம் தொடர்பு, சாலை வசதி, கழிவுநீர் வாய்க்கால் வசதி, கழிப்பறை வசதி, வீடு மற்றும் இதர நலத்திட்ட மனுக்கள் என பிரிக்கப்பட்டு, அவற்றை செயலி மூலம் பதிவேற்றம் செய்து, அந்த மனுவிற்கான குறியீடு எண்களை பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக மனுக்களை பதிவேற்றம் செய்ய 1 நிமிடம் 20 வினாடி எடுத்துக்கொள்கிறது.

ஆனால் ஏஐ தொழில் நுட்பத்தில் 10 -& 15 வினாடியில் பதிவேற்றம் செய்து, முதல்வரின் முகவரி செயலின் மூலம் மனுக்களுக்கான குறியீடு எண் பெறப்பட்டு, அதற்கான ஒப்புகை சீட்டு மனுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தி மனுக்கள் பெறும் முறை இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையை தொடர்ந்து மூன்று முதல் நான்கு வாரம் செயல்படுத்தும் போது, இதில் உள்ள திருத்தங்களை கண்டறிந்து நிவர்த்தி செய்யப்படும். மேலும், இத்திட்டம் குறித்து தமிழக முதல்வரிடம் சமர்பித்து, தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.



# பழனியில் தேமுதிக சார்பில் விஜயகாந்த் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன

திண்டுக்கல், ஆக.26-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள நகர்ப்புற வீடற்றோர் தங்கும் விடுதி மையத்தில் முற்போக்கு திராவிடர் கழகத்தின் நிறுவனர் கேப்டன் விஜயகாந்த் 74 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மேற்கு ஒன்றிய செயலாளர் துரைராஜ் தலைமையில் விஜயகாந்த் திருவுருவு படத்திற்கு மலர் தூவி சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டன.

தொடர்ந்து இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளராக தேமுதிக மாவட்ட செயலாளர் சிவக்குமார் கலந்து கொண்டு வீடற்றோர் இல்லத்தில் உள்ள அனைவருக்கும் அசைவ உணவுகள் வழங்கப்பட்டன..

மேலும் அருகிலுள்ள அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி விஜயகாந்த் பிறந்த நாள் விழாவை கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வில் குஜிலியம்பாறை ஒன்றிய செயலாளர் திருமுருகன் வடமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, காளிமுத்து, மானூர்மாரி, சத்திரியன் சரவணன், எல்லப்பன், தண்டபாணி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றன.. தொடர்ந்து மாவட்ட செயலாளர் கூறுகையில் தேமுதிக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழகப் பொதுச் செயலாளர் பிரேமலதாவிற்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். மேலும் மேகதாது அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒகேனக்கலில் தேமுதிக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வேலைபாடுகளை தடுத்து நிறுத்தப்பட்டன..

தொடர்ந்து வருகின்ற உள்ளாட்சித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தலில் தேமுதிக சார்பில் அதிகப்படியான வெற்றிகளை பெறுவதற்கு கழக நிர்வாகிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்..



# சர்க்கரை விலை 18% குறைந்து ஆலை விலை கிலோ ரூ.55-ஆக சரிவு.!!

டெல்லி: ஆக.26-

இறக்குமதி நடவடிக்கை காரணமாக சர்க்கரையின் ஆலை விலை சுமார் 18% குறைந்து ஒரு கிலோ ரூ.55-ஆக குறைந்துள்ளது என உணவுத்துறைச் செயலாளர் சஞ்சீவ் சோப்ரா தகவல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய சஞ்சீவ் சோப்ரா, இறக்குமதி அனுமதி மற்றும் பதுக்கல் மீதான கட்டுப்பாடுகளால் சர்க்கரையின் ஆலை விலையானது 18 சதவீதம் குறைந்து கிலோவுக்கு குறைந்துள்ளதாக உணவுத் துறைச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதல் சர்க்கரை இறக்குமதிக்கு அனுமதி அளித்ததுடன், சர்க்கரை பதுக்கல் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த அரசு எடுத்த முடிவைத் தொடர்ந்து, சர்க்கரையின் ஆலை விலை கிலோவுக்கு ரூ. 55-ஆக குறைந்து உள்ளது என்றார் சஞ்சீவ் சோப்ரா. சர்க்கரை ஆலைகள் செயற்கையாக விலையை உயர்த்தியதே இடையில் சர்க்கரை விலை உச்சத்தை தொடர் காரணமே தவிர, சந்தையில் உண்மையான தட்டுப்பாடு எதுவும் இல்லை என்றுபதை செயலாளர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மொத்த நுகர்வோருக்கான இருப்பு வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டு, நாடு முழுவதும் "பறக்கும் படைகள்" மூலம் சர்க்கரை பதுக்கல் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலை விலை தற்போது குறைந்தாலும், அது சில்லறை சந்தையில் சாதாரண மக்களுக்கு முழுமையாகக் கிடைக்க இன்னும் சில நாட்கள் ஆகும் என்றார்.

# மசினகுடியில் இலவச கண் சிகிச்சை முகாம் : 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு






நீலகிரி, ஆக.26-

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே மசினகுடியில் நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன், மசினகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மசினகுடி கிளை நூலகம் ஆகியவை இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை மற்றும் கண் கண்ணாடிகள் வழங்கும் முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் மசினகுடி ஒருங்கிணைப்பாளர் தேவஞானம் தலைமை தாங்கினார். மசினகுடி கிளை நூலகர் கபிலன், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், மசினகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் கிருபா நந்தினி ஆகியோர் முகாமை தொடங்கி வைத்தனர்.

உதகை அரசு மருத்துவக்கல்லூரி கண் மருத்துவக் குழு முதுநிலை மருத்துவர் விஜயஸ்ரீ, மருத்துவர் திலீப், கூடலூர் அரசு மருத்துவமனை கண் மருத்துவர் தாவா மற்றும் மருத்துவக் குழுவினர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டனர்.

முகாமில் கண்புரை, கண் நீர் அழுத்த நோய், மாலைக்கண் நோய், மாறுகண் நோய், தூரப்பார்வை, கிட்டப்பார்வை உள்ளிட்ட பல்வேறு கண் பாதிப்புகள் குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

முகாமில் 200-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். இதில் 30-க்கும் மேற்பட்டோருக்கு கண்புரை பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களில் 20 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்காக உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கண்புரை பாதிப்பு உள்ளவர்களுக்கு உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தரமான IOL லென்ஸ் பொருத்தி இலவசமாக அறுவை சிகிச்சை செய்து தரப்படும்.

45 வயதிற்கு மேற்பட்டோரில் கிட்டப்பார்வை குறைபாடு கண்டறியப்பட்ட 66 பேருக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும், இதர கண் பாதிப்புகள் மற்றும் மேல் சிகிச்சை தேவைப்படுவோர் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டனர்.

முகாமில் மசினகுடி ஆஷா பணியாளர் கவிதா கலந்து கொண்டு பொதுமக்களுக்கு ரத்த அழுத்தம் மற்றும் ரத்தச் சர்க்கரை அளவை பரிசோதனை செய்து வழங்கினார்.

முகாமிற்கு முன்னதாக கண் தான இரு வார விழாவை முன்னிட்டு கண் தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கண் மருத்துவர்கள் விஜயபஸ்ரீ மற்றும் திலீப் ஆகியோர் பொதுமக்களுக்கு கண் தானத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து மசினகுடி கிளை நூலகர் கபிலன் தன் கண்களை தானம் செய்வதற்கான பதிவை செய்து தொடங்கி செய்தார். தொடர்ந்து முகாமில் பங்கேற்ற 35 பேர் கண் தானம் செய்ய பதிவு செய்து கொண்டனர்.



## திருநங்கைகளுக்கான ஒரு நாள் சிறப்பு முகாம்

சிவகங்கை, ஆக.26-
சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட சமூக நலத்துறை மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து திருநங்கைகளுக்கான ஒரு நாள் சிறப்பு முகாமை நடத்தின. மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் அறிவுரையின்படி நடைபெற்ற முகாமுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் எஸ். செல்வசுரபி தலைமை தாங்கினார். சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள திருநங்கைகள் சுயதொழில் தொடங்கவும், தொழிலை மேம்படுத்தவும் பிரதமரின் ஸ்வநிதி திட்டம் மூலம் பிணையமில்லா மானியக் கடன் பெறுவதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. மேலும், அடையாள அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை, ஆயுஷ்மான் பாரத் அட்டை மற்றும் மானியத்துடன் வங்கிக் கடன் உதவி பெறுவது குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. முகாமில் 60-க்கும் மேற்பட்ட திருநங்கைகள் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை அதிகாரிகளிடம் தெரிவித்தனர். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.பிரவின்குமார், மாவட்ட சமூக நல அலுவலர் பெ.விசுபாவதி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பதவிகள் வழங்கல், சமூக சேவை விருதுகள், பிறந்தநாள் விழா: ஏழை மக்கள் கழக முப்பெரும் விழா





புதுச்சேரி, ஆக.26-
புதுச்சேரியில் ஏழை மக்கள் கழகம் சார்பில் புதிய நிர்வாகிகளுக்குப் பதவிகள் வழங்குதல், சமூக சேவை விருதுகள் வழங்குதல் மற்றும் கழக நிர்வாகிகளின் பிறந்தநாள் விழா என முப்பெரும் விழா, புதுச்சேரி ECR சாலையில் உள்ள ஓட்டல் சதர்ன் ரெசிடென்சியில் நடைபெற்றது.

விழாவிற்கு ஏழை மக்கள் கழக நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் தலைமை தாங்கினார். அவர் புதிய நிர்வாகிகளுக்குப் பதவிகளை வழங்கி, சமூக சேவையில் சிறப்பாக ஈடுபட்டவர்களுக்கு விருதுகள் வழங்கினார். மேலும், பிறந்தநாள் கொண்டாடிய கழக நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

புதுச்சேரி மாநில ஆன்மிக அணி தலைவியாக ஜெய்சாந்தி, லாஸ்பேட்டை தொகுதி தலைவராக முன்னாள் பள்ளி துணை முதல்வர் நாகப்பன், மணவெளி தொகுதி தலைவராக முன்னாள் காவல்துறை அதிகாரி கலைச்செல்வன், காலாப்பட்டு தொகுதி தலைவராக சமூகன் (அறக்கட்டளை சரவணன்), மாநில மகளிர் அணி துணைத் தலைவியாக சர்வதேச மக்கள் நல சமூக சேவகி லலிதாம்பிகை மற்றும் மாநில மகளிர் அணி செயலாளராக சமூக சேவகி சுகந்தினி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

விழாவில் உதவும் இதயம் பேரியக்கம் நிறுவனர் கவிஞர் புதுவைக்குமார், ஏழை மக்கள் கழக அமைப்பாளர் வழக்கறிஞர் கருணாகரன், துணை அமைப்பாளர் ராஜாமணி, கொள்கைப் பரப்பு செயலாளர் முத்தையன், சமூக சேவகர் புதுவை இளங்குயில், பல் மருத்துவரும் சமூக சேவகருமான ஜனனி உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

ஏழை மக்கள் கழகத்துடன் உறவுகளாக இணைந்து மக்கள் சேவையில் ஈடுபட விரும்புவோர் 99445 95267 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் அரசு பஸ் ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கு விழிப்புணர்வு வகுப்பு




மதுரை, ஆக.26-
மதுரை மாநகர் காவல் ஆணையர் எஸ். ராஜேந்திரன், ஐ.பி.எஸ். உத்தரவின்பேரில், போக்குவரத்து துணை ஆணையர் எஸ்.வனிதா மேற்பார்வையில், பெரியார் பேருந்து நிலையத்தில் அரசு பஸ் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு போக்குவரத்து விழிப்புணர்வு, நேர மேலாண்மை மற்றும் பொதுமக்களிடம் கனிவாக நடந்து கொள்வது தொடர்பான சிறப்பு வகுப்பு நடைபெற்றது.

பெரியார் பேருந்து நிலையத்திற்குள் பஸ்களை இயக்கும்போதும், பயணிகளை ஏற்றி இறக்கும்போதும், அங்கிருந்து புறப்படும்போதும் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து செயல்முறை விளக்கத்துடன் அறிவுறுத்தப்பட்டது. விபத்துகளைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளும் எடுத்துரைக்கப்பட்டன.

இதில் போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் அ.தங்கமணி, மா.பஞ்சவர்ணம், அரசு போக்குவரத்துக் கழக இயக்க மேலாளர் அசோக் மற்றும் 50-க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள் கலந்து கொண்டனர். இறுதியில், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பாக செயல்படுவதாக அவர்கள் உறுதிமொழி ஏற்றனர்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 மேற்கு அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் துணை மேயர்நாகராஜன் , பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். அருகில் உதவி ஆணையாளர் குமரன் உடன் உள்ளார்.






## மானாமதுரையில் வீரவிதை விளையாட்டு அறக்கட்டளையின் 10-ஆம் ஆண்டு துவக்க விழா கோலாகலம்

சிவகங்கை, ஆக.26-
சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் வீரவிதை விளையாட்டு மற்றும் தற்காப்புக் கலைகள் பயிற்சி அறக்கட்டளையின் 10-ஆம் ஆண்டு துவக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் சிறந்த வீரர்களுக்கான கோப்பை வழங்குதல் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்குச் சிறப்பு விருந்தினர்களாகக் காவல் துணைக் கண்காணிப்பாளர் லோகநாதன், வட்டாட்சியர் கிருஷ்ணகுமார், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திருமாவளவன், காவல் ஆய்வாளர் ரமேஷ்குமார், மதுரை யோகா கலைமாமணி கார்த்திகேயன், தலைமை ஆசிரியர் வினைதீர்த்தான், கிராம நிர்வாக அலுவலர் முனியாண்டி மற்றும் மதுரை சாதனை சிறகுகள் சிலம்பாட்டக் கழகத்தைச் சேர்ந்த தங்கப்பாண்டி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்புமிக்க வீரர்களை உருவாக்கிய வீரவிதை சிலம்பாட்ட அமைப்பின் நிறுவனரும் தலைவருமான டாக்டர் பெருமாள், மாவட்ட மற்றும் மாநில அளவிலான சிலம்பப் போட்டிகளில் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்த மாணவர்களுக்குப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினார்.

இவ்விழாவில் அரசு அதிகாரிகள், கலைத்துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் எனப் பலரும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



## பஞ்சமி நிலம், கண்மாய், இடுகாடு ஆக்கிரமிப்பு புகார்

### மாவட்ட எல்லைக் கல் 30 அடி மாற்றம் என பொதுமக்கள் அவசர மனு

விருதுநகர், ஆக,26-
விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் நரிக்குடி ஊராட்சிக்கு உட்பட்ட டி.கடபன்குளம் கிராம மக்கள் பயன்படுத்தி வரும் பஞ்சமி நிலம், சின்னக்கண்மாய் மற்றும் இடுகாட்டுப் பகுதியை பக்கத்து கிராமத்தைச் சேர்ந்த சிலர் ஆக்கிரமித்துள்ளதாகக் கூறி, தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் விருதுநகர், சிவகங்கை மாவட்ட ஆட்சியர்களுக்கு பொதுமக்கள் அவசர மனு அளித்துள்ளனர்.

டி.கடப்பன்குளம் கிராமத்தில் சுமார் 25 தேவேந்திரகுல வேளாளர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வரும் பஞ்சமி நிலம், சின்னக்கண்மாய் மற்றும் இடுகாட்டுப் பகுதிக்கு, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்ன கண்ணனூர் கிராமத்தைச் சேர்ந்த சிலர் உரிமை கோரி அச்சுறுத்தி வருவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய எல்லையை மீறி, டி. கடம்பன்குளம் கிராம எல்லைக்குள் சுமார் 30 முதல் 35 அடி வரை ஊடுருவி புதிய எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

மானாமதுரை மற்றும் திருச்சுழி வட்டாட்சியர்கள் முன்னிலையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்ற பிறகும், அதிகார பலத்தைப் பயன்படுத்தி மாவட்ட எல்லைக் கற்கள் முறைகேடாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

எனவே, பஞ்சமி நிலம், சின்னக்கண்மாய் மற்றும் இடுகாட்டுப் பகுதியை மீட்டு வழங்க வேண்டும்; மாற்றி நடப்பட்ட எல்லைக் கற்களை அகற்றி, பழைய வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் மறுக்கள ஆய்வு செய்து எல்லையைச் சீரமைக்க வேண்டும்; அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் 25 குடும்பங்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது

இரு மாவட்ட எல்லைப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவுவதால், முதலமைச்சர் மற்றும் இரு மாவட்ட ஆட்சியர்களும் உடனடியாகத் தலையிட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மகாராஜகடையில் அம்மையப்பர் திருநெறிய தீந்தமிழ் வேள்வி



கிருஷ்ணகிரி ஆக.25-
மகாராஜகடை அங்கனாமலையில் அம்மையப்பர் திருநெறிய தீந்தமிழ் வேள்வி மற்றும் வழிபாடு நடைபெற்றது. மகா கணபதி, ராமர், காட்டுவீர ஆஞ்சநேயர் சுவாமிகளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பக்தர்கள் ஊர்வலமாக அங்கனாமலை சென்று, வேள்வி, அபிஷேகம், திருகுட நன்னீராட்டு மற்றும் பேரொளி வழிபாட்டில் பங்கேற்றனர். கந்திஅப்பம் பைரவ சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற விழாவில், பக்தர்களுக்கு திருநீற்றுப் பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## தேனி மாவட்டம் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், சீப்பாலக்கோட்டை ஊராட்சியில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்

### கால்நடை வளர்ப்போர் பயன்பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன். வேண்டுகோள்



சின்னமனூர் ஆக.26-
தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் சீப்பாலக்கோட்டை ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் துவக்க விழாநிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், தலைமையேற்று கால்நடைகளுக்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் கால்நடைகளுக்கான சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 18 முகாம் வீதம் 144 முகாம்கள் நடைபெற உள்ளது. இதன்மூலம் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம், தடுப்பூசி, செயற்கை கருவுற்றல் உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படும். தேனி மாவட்டத்தில் ஆடு,மாடு, கன்றுகள் மற்றும் கோழிகள் என 2,50,000/-க்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன்பெறும் வகையில் இம்முகாம் நடைபெறுகிறது.

ஒவ்வொரு பகுதியிலும் காலை முதல் மாலை வரை மருத்துவ முகாம் நடைபெறும். கால்நடை வளர்ப்போர் தவறாமல் கால்நடைகளை முகாம்களுக்கு அழைத்து வந்து மருத்துவப் பரிசோதனை செய்து பயன்பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் இணை இயக்குநர் மரு.கிரிஜா, துணை இயக்குநர் மரு.சுகுமார், உதவி இயக்குநர்கள் மரு. சிவரத்தினம், மரு. ஈஸ்வரன், மரு.பாஸ்கரன் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161